இன்றைய செய்தி நாளைய வரலாறு



முரசொலி

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

வியாழக்கிழமை 29-05-2025

# கீழடியை எழுப்புவோம்!

**தஞ்சைக்குப் போனேன்**
**உயரமாய்த் தெரிந்தது**
**எங்கள் பள்ளம்.**

**கீழடிக்கு வந்தேன்**
**பள்ளத்தில் தெரிந்தது**
**எங்கள் உயரம்.**

- என்று எழுதி இருக்கிறார் கவிஞர் பழ.புகழேந்தி. ஆறு வரிக்குள் ஆயிரமாண்டு வரலாறும் இருக்கிறது. பண்பாட்டின் பெருமிதமும் இருக்கிறது. இதனைத்தான் சிதைக்கப் பார்க்கிறார்கள். கப்சா காவியங்களை வரலாறு ஆக்க, இந்த உண்மைகள் இடைஞ்சலாக இருக்கின்றன என்பதால் கீழடிக் கண்டுபிடிப்புகளை மறைக்கப் பார்க்கிறார்கள். பல்லாயிரமாண்டு வரலாறு, பல்லாயிரம் ஆண்டு கழித்தும் மேலே எழும்பி வந்தது அல்லவா? அதனைச் சிறுமதியாளர்கள் மறைக்க நினைப்பது மதியீனம்.

கீழடி கண்டுபிடிப்புகள் மூலமாக நான்காயிரம் ஆண்டு பழமையான வரலாற்றுக்குச் சொந்தக்காரர்களாக நமது இனம் அடையாளம் காணப்பட்டுள்ளது. கீழடிக்கு அருகில் அகரம் அகழாய்வு தளத்தில் சேகரிக்கப்பட்ட மண் மாதிரிகளை ஆய்வு செய்த போது அங்கே நெல்மணிகள் பயிரிடப்பட்டதற்கான சான்றுகள் கிடைத்திருக்கின்றன.

**கீழடி அகழாய்வில் 1000-க்கும் மேற்பட்ட குறியீடுகளும், 60-க்கும் மேற்பட்ட தமிழி எழுத்துப் பொறிப்புக் கொண்ட பானை ஓடுகளும் கண்டெடுக்கப்பட்டுள்ளன. பானை ஓடுகளில் குவிரன் ஆதன், ஆதன் போன்ற தனிநபர்களின் பெயர்கள் பொறிக்கப்பட்டுள்ளது. இதன் வாயிலாக சமுதாயத்தின் பல்வேறு பிரிவினரும் அந்தக் காலத்திலேயே கல்வி பெற்றவர்களாக இருந்துள்ளார்கள். பண்டைத் தமிழ்ச் சமூகம் கி.மு.ஆறாம் நூற்றாண்டில் எழுத்தறிவு பெற்றும், நகர நாகரீகத்துடனும் மேம்பட்ட தமிழ்ச் சமூகமாகவும் விளங்கியதை கீழடி அகழாய்வு முடிவுகள் வாயிலாக அறிவியல் பூர்வமாக தமிழ்நாடு அரசுத் தொல்லியல் துறை நிலை நிறுத்தியுள்ளது.**

கீழடி ஆய்வுகள், சிந்துச் சமவெளி ஆய்வுகளுக்கு மிகமிக நெருக்கமாக உள்ளன. சிந்துவெளி நாகரிகத்துக்கும் தமிழர் நாகரிகத்துக்குமான தொடர்பும், ஒற்றுமையும் மெய்ப்பிக்க 'காளைகள்' அடித்தளம் இட்டுள்ளன. கீழடி காளைகள்தான், சிந்துவெளியிலும் இருக்கிறது. நமது தாய்த்தெய்வ வழிபாடுஅங்கும்இருக்கிறது. கீழடிகட்டடக்கலையும்மண்பாண்டங்களும் சிந்து வெளியிலும் இருக்கின்றன. இந்த வரிசையில் ஆர். பாலகிருஷ்ணனின் ஆய்வுகள், தமிழ்ச் சொற்கள் மூலமாக உள்ள ஒற்றுமையை நிறுவி வருகிறார்.

தமிழாட்சி, தமிழ் இனத்தின் ஆட்சியை நடத்தி வரும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், கீழடிப் பெருமையை உலகளாவியதாக மாற்றி வருகிறார். கீழடி அகழாய்வில் கண்டெடுக்கப்பட்ட தொல்பொருட்கள் உலகத் தமிழர்கள், பொதுமக்கள் கண்டு களிக்கும் வகையில் இரண்டு ஏக்கர் நிலப்பரப்பில் 31,000 சதுர அடி பரப்பளவில் 18 கோடியே 43 லட்சம் ரூபாய் செலவில் 'கீழடி அருங்காட்சியகம்' தமிழ்நாடு அரசால் அமைக்கப்பட்டுள்ளது. அந்த வரிசையில் சில மாதங்களுக்கு முன் அவர் செய்துள்ள அறிவிப்பு உலகம் முழுக்க பரவி விட்டது.

**"செழித்து வளர்ந்த சிந்துவெளிப் பண்பாட்டின் எழுத்து முறையை இன்னும் தெளிவாகப் புரிந்து கொள்ள இயலவில்லை. நூறு ஆண்டுகளைக் கடந்தும் தீர்க்கப்படாத இந்த சிந்துவெளி புதிர் குறித்து உலகெங்கும் உள்ள தொல்லியல் ஆய்வாளர்கள், மொழியியல் அறிஞர்கள் மற்றும் கணினி வல்லுநர்கள் உட்பட பலரும் இன்றளவும் பெரும் முயற்சி செய்து வருகின்றனர். அம்முயற்சிகளை ஊக்கப்படுத்தும் வகையில் சிந்துவெளிப் புதிருக்கான உரிய விடையினை கண்டுபிடித்து, சிந்துவெளி எழுத்து முறையினைத் தெளிவாகப் புரிந்து கொள்ள உதவும் வழி வகையினை தொல்லியல் அறிஞர்கள் ஏற்கும்படி வெளிக்கொணரும் நபர்கள் அல்லது அமைப்பிற்கு ஒரு மில்லியன் அமெரிக்க டாலர் ( 8 கோடியே 57 லட்சத்து 70 ஆயிரம்) பரிசாக வழங்கப்படும்"** என்று சொல்லி இருக்கிறார் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

இவை அனைத்தையும் சிலரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. சில பாடல் வரிகளை வைத்துக் கொண்டு வேதியர் சிலர் எழுதி வைத்திருந்த கற்பனா வரலாறுகளை கீழடி ஆய்வுகள் அடித்து நொறுக்கி விட்டது. எனவே, கீழடி ஆய்வுகளை முடக்கப் பார்க்கிறார்கள்.

கீழடி அருகில் 2013 முதல் 2016 ஆம் ஆண்டு வரை ஒன்றிய அரசின் சார்பில் ஆய்வு நடத்தப்பட்டது. தொல்லியல் ஆய்வாளர் அமர்நாத் ராமகிருஷ்ணன் இந்த ஆய்வுகளைச் செய்தார். இதில் 5,765 பொருட்கள் கிடைத்தன. 2017 ஆம் ஆண்டு இவரை அசாம் மாநிலத்துக்கு மாற்றிவிட்டு, ஸ்ரீராமன் என்பவரை கீழடிக்குப் பொறுப்பாளராக நியமித்தார்கள். ஆனாலும் தனது அறிக்கையை அமர்நாத் ராமகிருஷ்ணன், ஒன்றிய அரசிடம் தாக்கல் செய்தார். 2600 ஆண்டுகளுக்கு முன் பழமையானவை என்பதை அறிவியல் ஆய்வுகள் மூலமாக இவர் மெய்ப்பித்துள்ளார். 982 பக்கங்கள் கொண்டது இந்த அறிக்கை. இதைத் தொடர்ந்து இந்த ஆய்வையே ஒன்றிய அரசு நிறுத்தியது. இதனால் தமிழ்நாடு அரசு தனது ஆய்வைத் தொடர்ந்தது.

இப்போது திடீரென, அமர்நாத் ராமகிருஷ்ணனின் அறிக்கையை ஒன்றிய அரசு திருப்பி அனுப்பி உள்ளது. ஆதாரங்கள் தேவை, திருத்தங்கள் தேவை என்று சொல்லி இருக்கிறது. 'கீழடி அகழாய்வு அறிக்கையில் கால வரிசைப்படி அனைத்து ஆவணங்களும் இணைக்கப்பட்டுள்ளன. உங்கள் சந்தேகங்கள் அனைத்துக்குமான விளக்கம் எனது அறிக்கையில் இருக்கிறது' என்று சொல்லி இருக்கிறார் அமர்நாத் ராமகிருஷ்ணன். 2017 முதல் இன்று வரை இவரை ஒரு இடத்தில் பணி செய்யவிடாமல் மாற்றிக் கொண்டே இருக்கிறார்கள். கீழடி ஆய்வுக்கு முதல் ஆண்டு நிதி ஒதுக்கிய ஒன்றிய அரசு அதன்பிறகு ஒதுக்கவில்லை. 'தமிழ்' பெருமை பேசி, காசி சங்கமம் நடத்தும் பா.ஜ.க. அரசால்தான் சங்கறுக்கும் காரியமும் நடக்கிறது.

**வேத நாகரிகத்துக்கு முந்தியது தமிழர் பண்பாடு என்று நிறுவப்படக் கூடாது என்பதுதான் அவர்களது எண்ணம். வேத நாகரிகத்தை வென்றது தமிழர் பண்பாடு என்பதும் நிறுவப்படும். இப்போது கீழடியை கிண்டல் செய்து வரும் பி.ஏ.கிருஷ்ணன் போன்றவர்கள் அப்போது வரலாற்றின் குப்பைத் தொட்டியில் கிடப்பார்கள்.**

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில்
விளம்பரப் பலகைகள் அமைப்பதற்கான

## உரிமம் பெற்றிட ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கும் புதிய டிஜிட்டல் நடைமுறை!

சென்னை, மே.29-

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விளம்பரப் பலகைகள் அமைப்பதற்கான உரிமம் பெற்றிட ஆன்லைன் முறையில் விண்ணப்பிக்கும் புதிய டிஜிட்டல் நடைமுறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

இந்த முறையின் மூலம், பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விளம்பரப் பலகைகள் அமைப்போர் தங்கள் விண்ணப்பங்களை ஆன்லைனில் சமர்ப்பித்து அங்கீகாரம் பெற முடியும். பெருநகர சென்னை மாநகராட்சியின் இந்த டிஜிட்டல் முறையானது, வெளிப்படைத்தன்மை, திறமையான நிர்வாகம் மற்றும் மக்களுக்காக மையப்படுத்தப்பட்ட சேவைகளின் நோக்கில் ஒரு முக்கியமான முன்னேற்றமாகும்.

கடந்த 21.05.2025 முதல், அனைத்து விளம்பரப் பலகைகள் அமைப்பதற்கான அனுமதி விண்ணப்பங்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் அதிகாரப்பூர்வ இணையதளம் வழியாக மட்டுமே சமர்ப்பிப்பதற்கான நடைமுறை செயல்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, ஆன்லைனில் விண்ணப்பங்களை சமர்ப்பித்தல், தேவையான ஆவணங்களை பதிவேற்றம் செய்தல், ஆன்லைனில் கட்டணம் செலுத்தல், விண்ணப்ப நிலையை நேரடியாகக் கண்காணித்தல், புதிய தகவல்கள் மற்றும் அங்கீகாரங்களை ஆன்லைனில் பெறுதல் மற்றும் விண்ணப்பங்கள் சம்பந்தப்பட்ட மண்டல குழுவால் செயலாக்கப்பட்டு, போக்குவரத்துக் காவல் அனுமதி (No Objection Certificate) பெற ஒப்படைக்கப்படும். பின்னர், இந்த விண்ணப்பங்கள் ஒற்றை சாளர குழுவின் (Single Window Committee) முன் வைக்கப்படும். இந்தக் குழுவானது மாதந்தோறும் ஒரு முறை கூடி, உரிய அனுமதி நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும். அங்கீகாரம் பெற்ற விண்ணப்பங்கள் டிஜிட்டல் வடிவில் விண்ணப்பதாரருக்கு அறிவிக்கப்படும். இதற்காக நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை ஆன்லைனில் செலுத்திய பிறகு இறுதி அனுமதி வழங்கப்படும். இது தொடர்பாக விரிவான வழிகாட்டுதல்கள் பெருநகர சென்னை மாநகராட்சியின் "https://chennaicorporation.gov.in" இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது.

பெருநகர சென்னை மாநகராட்சிப் பகுதிகளில் விளம்பரப் பலகைகள் அமைப்போர் அனைவரும் இந்த ஆன்லைன் நடைமுறையினை முழுமையாகப் பயன்படுத்தி, நேர்மையான மற்றும் ஒருங்கிணைந்த செயல்முறையை உறுதி செய்ய ஒத்துழைக்குமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மேற்கண்ட தகவலை பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையர் தெரிவித்துள்ளார்.

# மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் போட்டியிடும் கழக வேட்பாளர்கள்!

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அறிவிப்பு!

2025 ஜூன் 19 அன்று நடைபெறவிருக்கும் மாநிலங்களவை உறுப்பினர் தேர்தலில் திராவிட முன்னேற்றக் கழகத்தின் சார்பில் போட்டியிடும் நான்கு இடங்களில், மூன்று இடங்களுக்கு தி.மு.க. வேட்பாளர்களும், மற்றுமுள்ள ஒரு இடத்திற்கு ஏற்கெனவே செய்துகொண்ட ஒப்பந்தத்தின்படி **மக்கள் நீதி மய்யத்திற்கு** ஒரு இடம் ஒதுக்கப்படுகிறது.

**தி.மு.க. வேட்பாளர்களாக**

1. திரு. **பி.வில்சன்** பி.எஸ்சி.,பி.எல்.,



2. திரு. **எஸ்.ஆர்.சிவலிங்கம்**



3. ரொக்கையா மாலிக் (என்கிற) **கவிஞர் சல்மா**



**ஆகியோர் போட்டியிடுவார்கள் என்று அறிவிக்கப்படுகிறது.**

**"அண்ணா அறிவாலயம்"**
சென்னை - 18
நாள்: 28.5.2025

**மு.க.ஸ்டாலின்**
தலைவர்
தி.மு.க.

# பேராசிரியர் தி. இராசகோபாலன் எழுதிய "கலைஞரின் பேனா" நூல்!

## முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் வெளியிட்டார்!

**சென்னை, மே 29 -**

**முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.5.2025) தலைமைச் செயலகத்தில், பேராசிரியர் தி.இராசகோபாலன் அவர்கள் எழுதிய "கலைஞரின் பேனா" நூலினை வெளியிட்டார்.**



முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் நேற்று (28.5.2025) தலைமைச் செயலகத்தில், பேராசிரியர் தி.இராசகோபாலன் அவர்கள் எழுதிய "கலைஞரின் பேனா" நூலினை வெளியிட்டார். இந்த நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே. சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ்.ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், கற்பகம் புத்தகாலயத்தின் நல்லதம்பி ஆகியோர் கலந்து கொண்டனர்.

திருவாரூர் மாவட்டத்தைச்சேர்ந்தநூலாசிரியர் பேராசிரியர் இராசகோபலன் அவர்கள், முரசொலி செல்வம் அவர்களின் வகுப்புத் தோழர், திராவிட மாணவ முன்னேற்றக் கழகத்தில் இணைந்து பணியாற்றியவர் ஆவார். அவர் ஆண்டு தோறும் ஆழ்வார்கள் ஆய்வு மையக் கூட்டங்களை சிறப்பாகநடத்துகின்றபாங்கினை முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் பாராட்டியுள்ளார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் ஆட்சித்திற ஆளுமைகள், இலக்கிய ஆளுமைகள் முதலியவற்றை குறித்து இந்நூலில் நூலாசிரியர் வெளிப்படுத்தியிருக்கிறார்.

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களை தொண்டால் தொட்டவர்கள் உண்டு; அவரைக் கலையால் தொட்டவர்கள் உண்டு; ஆனால், கலைஞருடைய பேனாவைத் தொட்டு, அவரது நெஞ்சைத் தொட்டவர் நூலாசிரியர். "கலைஞருடைய எழுத்துக்கள் எனக்குப் பிராண வாயுவாகிப் போனதால், அவற்றைப் பதிவு பண்ணும் ஒலிப்பதிவு கருவியானேன்" என்கிறார் நூலாசிரியர்.

இந்நூலில், கலைஞர் தம் வாழ்நாளில் நேரம் காலம் இல்லாமல் எழுதிக் கொண்டிருந்தார்; அதனால்தான் அவருடைய எழுத்துக்கள் நேரம் காலம் இன்றி வாழ்கின்றன என்றும், பண்டித ஜவகர்லால் நேரு, இராபர்ட் ப்ராஸ்ட்டினுடைய கவிதையை எழுதி தம் மேஜை மீது வைத்திருந்தார். ஆனால், கியூபாவின் அதிபர் பிடல் காஸ்ட்ரோ அவர்கள் 20.01.2006 அன்று கலைஞர் அவர்கள் எழுதிக் கொடுத்த கவிதையை ஸ்பானிஷ் மொழியில் மொழி பெயர்த்துத் தம் மேஜையின் மீது வைத்திருந்தார் என்று குறிப்பிட்டுள்ளார்.

உலகத்துக் கவிஞர்களின் எழுத்துக்களோடு முத்தமிழறிஞரின் எழுத்துக்களை ஒப்பிட்டால், மற்றவர்களுடைய எழுத்துக்கள் மலையடிவாரத்தில் நடக்கின்றன. ஆனால், கலைஞரின் எழுத்துக்கள் மலையின் சிகரத்தில் உயர்ந்து நிற்கின்றன என்றும், கலைஞருடைய நாவும் பேனாவும் ஒரே உறையில் கிடக்கும் இரண்டு வாள்கள். கலைஞர் தம்முடைய எழுத்துப்பணியைப் புதுச்சேரியிலிருந்து வெளி வந்த பத்திரிகையில் தொடங்கினார். அந்த முதல் கட்டுரைக்கு "அந்தப் பேனா" எனப் பெயரிட்டிருந்தார். அதனால் இந்த நூலுக்கு "கலைஞரின் பேனா" எனத் தலைப்பிடப்பட்டதாக நூலாசிரியர் தெரிவித்துள்ளார்.

தமிழக அரசியல் மட்டுமன்றி, இந்திய அரசியலையே உச்சி முதல் பாதம் வரை அளந்தது, கலைஞருடைய பேனா என்று முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் எழுத்துப் பணியை இந்நூல் போற்றிப் புகழ்கிறது.

இந்த நிகழ்ச்சியில், இந்து சமய அறநிலையத் துறை அமைச்சர் பி.கே.சேகர் பாபு, நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். ஜெகத்ரட்சகன், சட்டமன்ற உறுப்பினர் அன்னியூர் சிவா, இந்து சமய அறநிலையத் துறை ஆலோசனைக் குழு உறுப்பினர் சுகி சிவம், கற்பகம் புத்தகாலயத்தின் நல்லதம்பி ஆகியோர் கலந்து கொண்டனர்.